இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 315 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 11 – புதன்கிழமை 25 ஜூன் 2025 – வெளியூர் 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 315 : Thiruvalluvar Year - 2056 - Aani 11 - Wednesday 25 June 2025 - Dak 28 Pages ₹ 5.00

## சமஸ்கிருதத்திற்கு அதிக நிதி - மற்ற மொழிகளுக்கு அநீதி

# “போலிப்பாசம் தமிழுக்கு; பணமெல்லாம் சமஸ்கிருதத்துக்கு!”

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். உடன் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., உள்ளார்.

**சென்னை, ஜூன் 25-**

**சமஸ்கிருதத்திற்கு அதிக நிதி; மற்ற மொழிகளுக்கு அநீதி என்று சொல்லத்தக்க வகையில், தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு சமஸ்கிருதத் துக்கு அதிக நிதி ஒதுக்கி வருகிறது. அதே சமயம் மற்ற மொழிகளின் மேம்பாட்டிற்கு சொற்ப தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தெரியவந்துள்ளது.**

**இதுகுறித்து சமூக வலைதளத் தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் “போலிப் பாசம் தமிழ் மீது ; பணமெல்லாம் சமஸ்கிருதத்துக்கு” என்று பதிவிட்டுள்ளார்.**

அதன் விவரம் வருமாறு:-

பா.ஜ.க. அரசு தொடர்ச்சியாக தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. ரயில்வே நிதி, வெள்ள நிவாரண நிதி, வளர்ச்சி திட்டங்களுக்கான நிதி, மெட்ரோ ரயில் திட்ட நிதி என எதற்கும் தமிழ்நாட்டுக்கு நிதியை ஒதுக்குவதில் ஒன்றிய அரசு பாரபட் சம் காட்டி வருகிறது. தேவையான நிதிகளைகூட வழங்காமல் ஏதோ தமிழ்நாட்டினர் அந்நியர்கள் என்ற அளவில்தான் ஒன்றிய அரசு வைத் துள்ளது. இதற்கு முக்கிய காரணம் தமிழ்நாட்டு மக்கள் பா.ஜ.க.வை புறந்தள்ளி வைத்திருப்பதால்தான். எதிர்க்கட்சியினர் ஆளும் மாநில மாக இருப்பதால் தமிழ்நாட்டுக்கு எதுவுமே செய்யக்கூடாது என்ற மாற்றாந்தாய் மனப்பான்மையு டன் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது.

### திருக்குறள் சொல்லி ஏமாற்றும் மோடி!

நாடாளுமன்றத் தேர்தலின் போது தமிழ்நாட்டுக்கு அடிக்கடி வந்து தமிழர்கள் மீது பாசம் கொண் டவர்போல பிரதமர் காட்டிக்கொண் டார். ஆனால் அவர்கள் நினைத்தது எதுவும் நடக்காததால் தற்போது தமிழ்நாட்டில் நடைபெறும் திட்டப் பணிகளுக்கு ஒதுக்கிய நிதியைகூட குறைத்திருப்பது தெரியவந்துள் ளது. தேர்தல் நேரத்தில் மட்டும் அடிக்கடி வந்து ஒரு திருக்குறளை சொல்லியும், உலகின் மூத்த மொழி தமிழ் என்று பெருமை கொண்டும் தமிழ் மொழிக்காக அத் தனையும் செய்பவர்போல காட் டிக்கொண்டார் பிரதமர் மோடி. ஆனால் தற்போது அந்த தமிழ் மொழிக்கு குறைந்த அளவில்தான் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி இருக்கும் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் சமஸ்கிருதத்தை தாய்மொழியாக கொண்ட மக்கள் 24 ஆயிரத்து 821 பேர் மட்டுமே என புள்ளி விவரங்கள் தெரிவிக் கிறது. சமஸ்கிருதம் இந்தியாவின் எந்த மாநிலத்தின் மொழியும் அல்ல. ஆனால் சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்காக கடந்த 10 ஆண்டு களில் ஒன்றிய அரசு செலவிட்ட தொகை ரூ.2532,59 கோடி. இதன்மூலம் மொழிகள் வளர்ச்சிக் காக ஒன்றிய அரசு ஒதுக்கும் நிதி பாரபட்சமாக உள்ளது என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது.

### இந்தியாவின் பன்முகத் தன்மையை சிதைப்பதாகும்!

இந்திய அரசு அனைத்து இந்திய மொழிகளுக்கும் செலவிடுகின்ற தொகையில் 61 சதவீதம் சமஸ் கிருத மொழிக்கு மட்டுமே செலவிடு கிறது என்பதை இந்த தகவல் அறி யும் உரிமை சட்ட தகவல்கள் மூலம் தெரியவந்திருக்கிறது. தமிழ் மொழியை தாய்மொழியாக கொண்டவர்கள் இந்தியாவின் பல மாநிலங்களிலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் நீண்ட நெடுங்காலமாக வசித்து வருகிறார் கள். அங்குள்ள குழந்தைகளுக்கு தமிழையும், தமிழ் மொழியின் தொன்மைகளையும், தமிழ்மொழி யில் உள்ள இலக்கிய இலக்கணங் களையும் கொண்டு சேர்ப்பது ஒன்றிய அரசின் கடமையாகும். ஆனால் இந்தியாவை சமஸ்கிருத நாடாக உருவாக்குகின்ற வகை யில் ஒரு மொழிக்கு மட்டுமே முன் னுரிமை கொடுப்பது இந்தியாவின் பன்முகத்தன்மையை சிதைப்ப தாகும்.

2014 முதல் 2025 வரையில் ஒன்றிய அரசு சமஸ்கிருதத்திற்கு ரூ.2532.59 கோடி ஒதுக்கியுள்ள நிலையில் தமிழ்மொழிக்கு ரூ.113.48 கோடி மட்டுமே ஒதுக்கி யுள்ளது. தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஒடியா மொழி களுக்கு சேர்த்து ரூ.34.08 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 5 மொழி களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை யைக் காட்டிலும் மிகக் குறைந்த அளவே பேசப்படும் சமஸ்கிருத மொழி மேம்பாட்டிற்கு 17 மடங்கு அதிகம் ஒதுக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசு ஓரவஞ்சனை செய்துள்ளது வெளிப்படையாகத் தெரிகிறது.

**இதுபற்றி குறிப்பிடும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “போலிப்பாசம் தமிழுக்கு; பணமெல்லாம் சமஸ்கிருதத்துக்கு என்றும் ‘சமஸ்கிருதத்துக்கு கோடிக் கணக்கிலும் தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளுக்கு முதலைக் கண்ணீர் மட்டுமே” என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

# சைபர் குற்றவாளிகளுக்கு எதிராக குண்டர் சட்டம்!

## தமிழ்நாடு அரசுக்கு உச்ச நீதிமன்றம் பாராட்டு!

**புதுடெல்லி, ஜூன் 25-**

**சைபர் குற்றவாளிகளுக்கு எதி ராக குண்டர் சட்டத்தை பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளும் தமிழ் நாடு அரசுக்கு உச்ச நீதிமன்றம் தனது பாராட்டைத் தெரிவித்துள்ளது.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த குருமுகா சிங் என்பவருக்கு எதிராக ஐடி சட்டத் தின் பிரிவு 420 மற்றும் பிரிவு 66டி ஆகியவற்றின் கீழ் சைபர் குற்றங் களுக்கு எதிராக குண்டர் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதையடுத்து இந்த உத்தரவுக்கு எதி ராகவும், குண்டர் சட்டத்தை ரத்து செய்யக்கோரியும் சம்பந்தப்பட்ட நபர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவானது உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் சந்தீப் மேத்தா மற்றும் ஜாய்மால்யா பக்ஷி ஆகியோர் அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

இதையடுத்து மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், “இந்த விவ காரத்தில் எனது செயல்பாடுகள் என் பது ஒரு தனிநபருக்கு எதிரான ஒரு தனிப்பட்ட நிகழ்வு ஆகும். பொது ஒழுங்கை எந்தவிதத்திலும் பாதிக்க வில்லை. இருப்பினும் சைபர் குற் றங்களுக்கான வழக்குப் பதிவு செய் யப்பட்டு குண்டர் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சட்டப் பிரதிநிதித்துவத்திற்கு போதுமான அவகாசமும் வழங்கப் படவில்லை. குறிப்பாக 25ம் தேதி விசாரணை என்று, 23ம் தேதி தான் நோட்டீஸ் வழங்கப்பட்டது. மேலும் நான் மதுரையில் வசிக்கி றேன். ஆனால் விசாரணை சென் னையில் நடந்தது. இதனை உச்ச நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் என் மீது முன் னதாக குற்றப்பின்னணி எதுவும் கிடையாது. இருப்பினும் அதிகப்பட் சமாக 12 மாதங்கள் தடுப்பு காவல் சட்டத்தின் மூலம் தண்டனை வழங் கப்பட்டுள்ளது. அதனை ரத்து செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

இதையடுத்து நீதிபதிகள் பிறப் பித்த உத்தரவில், “இந்த விவகாரத் தில் குண்டர் போன்ற தடுப்பு காவல் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப் பது என்பது அது அரசின் விருப்புரிமை ஆகும். தடுப்புக்கா வல் காலத்தை ரிட் அதிகார வரம்பில் எங்களால் அதாவது உச்ச நீதிமன் றத்தால் தீர்மானிக்க முடியாது. சைபர் குற்ற விவகாரத்தில் தடுப்புக் காவலுக்கு எந்த அடிப்படையும் இல்லை என்றால், அந்த உத்தரவு என்பது தானாகவே செயலிழந்து விடும். இருப்பினும் அதற்கான கால அளவைக் குறைக்க முடியாது.

மேலும் வழக்கு குறித்த முழு தக வல்கள் குறித்த அறிக்கையை மனு தாரரும், அதேபோன்று எதிர்மனு தாரர் பதில் மனுவையும் தாக்கல் செய்யுங்கள். வழக்கை புதன்கிழமை பட்டியலிட்டு விசாரிக்கிறோம். இருப் பினும் சைபர் சட்ட குற்றவாளி களுக்கு எதிராக குண்டர் போன்ற தடுப்புச் சட்டங்கள் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படுவது என்பது ஒரு நல்ல போக்கு ஆகும். இது மிகவும் வரவேற்கத்தக்க அணுகுமுறை. குறிப்பாக இதுபோன்ற குற்றவாளி களுக்கு எதிராக சாதாரண குற்ற வியல் சட்டங்கள் வெற்றி பெறுவது கிடையாது என்று தெரிவித்த நீதிபதி கள், தமிழ்நாடு அரசுக்கு பாராட்டை தெரிவித்து வழக்கை ஒத்தி வைத்தனர்.

## மகாராஷ்டிரா மாநிலத்தில்,

# இந்தியை மூன்றாவது மொழியாக கட்டாயமாக்கும் திட்டம் நிறுத்தி வைப்பு !

## மராத்தி முதல்மொழி, ஆங்கிலம் 2 ஆம் மொழியாக அறிவிப்பு!

*மும்பை, ஜூன் 25-*

*மகாராஷ்டிரா மாநில அரசு அண்மையில், ‘மராத்தி மற்றும் ஆங்கில வழிப் பள்ளிகளில் 1 முதல் 5 ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இந்தி 3வது மொழியாக கற்பிக்கப்படும் என உத் தரவு பிறப்பித்தது.*

*இந்தி பொதுவாக 3வது மொழியாக இருக் கும், ஒரு பள்ளியில் ஒரு வகுப்பில் இந்தி தவிர வேறு எந்த இந்திய மொழியை படிக்க மாணவர்கள் விரும்பி னால், குறைந்தது 20 பேராவது அந்த மொழியைத் தேர்வு செய்திருக்க வேண்டும் என உத்தரவில் தெரிவிக் கப்பட்டிருந்தது.*

*இதற்கு எதிர்க்கட்சி கள் கடும் எதிர்ப்பு தெரி வித்ததுடன், இது புற வாசல் வழியாக இந்தியை திணிக்கும் முயற்சி என குற்றம்சாட்டின.*

*கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில், முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் அதிகாரிகளுடன் ஆலோ சனை நடத்தினார்.*

*மூன்றாம் மொழியாக கட்டாயமாக்கும் திட் டத்தை நிறுத்தி வைப்ப தாக மகாராஷ்டிரா அரசு அறிவித்துள்ளது.*

*கல்வியாளர்கள் உள் ளிட்டோருடன் விரி வான ஆலோசனை நடத் திய பிறகு மட்டுமே இந்தியை மூன்றாவது மொழியாக அனுமதிப் பது குறித்து முடிவு செய் யப்படும் என அம்மாநில பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.*

*மராத்தி முதல் மொழி யாகவும், ஆங்கிலம் இரண்டாவது மொழி யாகவும் தொடரும், மூன்றாவதாக விரும்பிய மொழியை மாணவர்கள் தேர்வு செய்யலாம், இந்தி கட்டாயம் இல்லை என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.*

